

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னல்வாடி ஊராட்சி, பழங்குணம் மாரியம்மன் கோவில் மைதானத்தில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமினை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேற்று (29.05.2025) தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார், இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சபா.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் கீதா, திருக்கோவிலூர் கோட்டாட்சியர் ஆனந்தகுமார் சிங் மற்றும் உளுந்தூர்பேட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர், மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜவேல் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அலாவுதீன் தலைமையில்

# ஏழாவது மாநில நிதி ஆணையம்!

## தமிழ்நாடு அரசு ஆணை!

சென்னை, மே 30 -

**தமிழ்நாடு அரசு ஏழாவது மாநில நிதி ஆணையம் அமைத்து உத்தரவு வெளியிட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே.அலாவுதீன் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த ஆணையத்தில், அலுவல் சாரா உறுப்பினர்கள் மூவரும், உறுப்பினர் செயலர் ஒருவரும் உள்ளார்.**

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-*

*தமிழ்நாடு அரசு ஏழாவது மாநில நிதி ஆணையத்தினை அமைத்து ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையமானது பல்வேறு நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை குறித்து ஆய்வு செய்து மாநில அரசு வழங்கிட வேண்டிய நிதிப்பகிர்வு குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கிடும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்ட வகையில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் பின்வருமாறு நியமித்து ஆணையிட்டுள்ளது:*

*(1) தலைவர் : கே.அலாவுதீன், இ.ஆ.ப. (ஓய்வு),*

*(2) அலுவல் சாரா உறுப்பினர் :என்.தினேஷ்குமார், மேயர், திருப்பூர் மாநகராட்சி*

*(3) உறுப்பினர் (அலுவல் வழி) : நகராட்சி நிர்வாக இயக்குநர்*

*(4) உறுப்பினர் (அலுவல் வழி) : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்*

*(5) உறுப்பினர் (அலுவல் வழி) : பேரூராட்சிகளின் ஆணையர்*

*(6) உறுப்பினர்செயலர் : பிரத்திக் தாயள், இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர் (வரவுசெலவு) (முழு கூடுதல் பொறுப்பு), நிதித்துறை.*

*இந்த ஆணையம், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின், அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்து, பிற இனங்களுடன் பின்வருபவை குறித்து பரிந்துரை செய்யும்:*

*i.மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும் ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளுதல், அத்தகைய வருவாயில் மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே அவற்றிற்குரிய பங்குகளை முறையே பிரித்தளித்தல்;*

*ii.ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படக்கூடிய அல்லது அவைகளே தக்கவைத்துக் கொள்ளக்கூடிய வரிகள், தீர்வைகள், சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றைத் தீர்மானித்தல்; மற்றும்*

*iii.மாநில அரசின் தொகுப்பு நிதியிலிருந்து மேற்குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்கள்;*

*2027 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில், இந்த ஆணையம், 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் தேதிக்குள் தனது அறிக்கையை தமிழ்நாடு அரசுக்கு அளித்திடும்.*

### கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா, எம்.பி. பங்கேற்கிறார்!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்ட மன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட தேதிகளில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இக்கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மண்டல தேர்தல் பொறுப்பாளர் ஆ. ராசா அவர்கள் பங்கேற்று நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணிகள் சம்மந்தமாக ஆலோசணைகளை வழங்க உள்ளார்.

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 06.06.2025 வெள்ளி | காலை 9.00 மணி | திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி | ஓட்டல் சதர்ன் ரெசிடென்சி, கேளம்பாக்கம். |
| | காலை 10.30 மணி | செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி | ஓட்டல் எஸ்.ஆர்.ஆர். கிராண்ட், ஓட்டேரி, வண்டலூர். |
| | பகல் 12.00 மணி | திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி | ஓட்டல் கிராண்ட் படப்பை ரெசிடென்சி, படப்பை. |
| 07.06.2025 சனி | காலை 9.00 மணி | ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி | வச்சலா திருமண மண்டபம், பழவந்தாங்கல் (சுரங்கப்பாதை அருகில்) |
| | காலை 10.30 மணி | பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி | ஓட்டல் கிராண்ட் பேலஸ், குரோம்பேட்டை. |
| | பகல் 12.00 மணி | தாம்பரம் சட்டமன்றத் தொகுதி | ராஜகோபால் திருமண மண்டபம், துரைசாமி தெரு, மேற்கு தாம்பரம். |

எனவே, இந்த சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டத்தில், அந்தந்த சட்டமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், மாநர நிர்வாகிகள், மாநகர வட்டச் செயலாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர் - மாநரகராட்சி மேயர் - துணை மேயர், நகராட்சி - பேரூராட்சி தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் (மேற்குறிப்பிட்டுள்ளவர்கள் மட்டும்) தவறாமல் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பின்படி

# ஆலந்தூர் தெற்கு 163-வது வார்டில் ஆதார் சிறப்பு முகாம்!

## வட்டச் செயலாளர்கள் கே.ஆர்.ஜெகதீஸ்வரன் – ஏ.வேலவன் வேண்டுகோள்

*சென்னை, மே 30 -*

*ஆலந்தூர் கிழக்குப் பகுதி 163- வார்டு பொது மக்கள் பயன்பெறும் வகையில் ஆதாரை புதுப்பிக்க, புதிய ஆதார் எடுப்பதற்காக அஞ்சல் துறையினர் ஆதார் எடுக்கும் சிறப்பு முகாமினை மாமன்ற உறுப்பினர் பூங்கொடி ஜெகதீஸ்வரன், வட்டச் செயலாளர்கள் ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.*

*ஆலந்தூர் தொகுதி - ஆலந்தூர் தெற்குப் பகுதி 163-வது வட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, இந்திய அஞ்சல் துறை சார்பில் சிறப்பு ஆதார் முகாம் இன்று (30.5.2025- வெள்ளிக்கிழமை) நாளை 31.5.2025 சனிக்கிழமை ஆகிய நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை 163-வது வார்டு சென்னை மாநகராட்சி பள்ளி கருணிகர் தெரு ஆதம்பாக்கத்தில் நடைபெறுகிறது. இதில் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், வடக்குப் பகுதிச் செயலாளர் பி.குணாளன், 163- வார்டு மாமன்ற உறுப்பினர் பூங்கொடி ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.*

*இந்த முகாமில் பொது மக்கள் ரேஷன் கார்டு, வங்கி பாஸ் புத்தகம், கேஸ் ரசீது, வாக்காளர் அட்டை, பாஸ் போர்ட் போட்டோ, மொபைல் நம்பர் சேர்க்க மாற்ற ரூபாய் 50/ ஆதார் அசலுடன் நேரில் வர வேண்டும்.*

*புதிய ஆதார் எடுக்க பெயர்மாற்றத்திற்கான ஆவணம், பான் கார்டு, பார்ஸ்ட் போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பிறந்த தேதி மாற்றத்திற்கானஆவனம், பாஸ் போர்ட் போட்டோ, பிறப்பு சான்றிதழ், கல்விச் சான்றிதழ் ஆகியவற்றை கொண்டுவரம்படி கேட்டுக்கொள்கிறோம்.*

*நமது ஆலந்தூர் தெற்குப் பகுதி 163 - வட்டம், 163 அ வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், தமது பகுதி வாழ் மக்களை மேற்கண்ட ஆவணங்களுடன் இந்த முகாமில் பங்கேற்று பயன் பெறச் செய்யுமாறு 163-வது வட்டச் செயலாளர் கே.ஆ.ஜெகதீஸ்வரன், 163அ வட்டச் செயலாளர் அ.வேலவன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்னர்.*

# ஆத்தூர் தொகுதியில் சமுதாயக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை!

## கசவனம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், மே.30–

ஆத்தூர் தொகுதியில் சமுதாயக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது என்று கசவனம்பட்டி ஊராட்சி கரட்டுப்பட்டியில் நடைபெற்ற சமுதாயக் கூட திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி ரூ.50 லட்சம் மதிப்பில் கரட்டுப்பட்டி பாலமுருகன் திருக்கோவில் வளாகத்தில்; கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கரட்டுப்பட்டி கிராம மக்கள் தங்கள் பகுதியில் உள்ள ஸ்ரீபாலமுருகன் திருக்கோவில் வளாகத்தில் சமுதாயக்கூடம் வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை மனுவை கொடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ரூ.50 லட்சம் மதிப்பில் தனது சொந்த செலவில் புதிய சமுதாய கூடத்தை கட்டிக்கொடுக்க உறுதியளித்தி ருந்தார். அதன்படி கட்டப்பட்ட சமுதாயக்கூட திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு ரெட்டியார் சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார்.

தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், துணை தலைவர் கீதா முருகானந்தம் ,மாவட்ட பிரதிநிதி பெருமாள்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் ஆரத்தி எடுத்து கும்ப மரியாதையுடன் பரிவட்டம் கட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதன்பின்னர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் மண்டபத்தை திறந்து வைத்து பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசியதாவது.

இன்று என் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விழா நடைபெற்று உள்ளது. காரணம் இப்பகுதியில் உள்ள முருகன் கோவிலில் திருமணம் மற்றும் இதர விழாக்களை நடத்துவதுடன் தங்களுக்கு மண்டபம் வசதி வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்த னர். அவர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு இன்று பயன்பாட்டிற்காக திருமண மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஏழை, எளிய மக்கள் குறைந்த செலவில் தங்கள் விழாக்களை நடத்த முடியும் என்றார். குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் அனைத்து கிராமங்களிலும் சமுதாய கூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர தேவைப்படும் கிராமங்களுக்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள், நாடக மேடைகள், கட்டிக்கொடுக்கப்படும் என்றார். இப்பகுதியில் ஒப்பந்தகாரர் பொன் முருகன் சிறந்த முறையில் தரமான கட்டிடத்தை கட்டிக்கொடுத்துள்ளார். சமுதாயக் கூடத்தின் மேலே உணவு அருந்தும் அறையும், இதர அறைகளும் கட்டிக்கொடுக்கப்படும் என்றார். விழாவில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே. சக்தி, கரிசல்பட்டி தலைவர் பால் ராஜ், கசவனம்பட்டி துணைத் தலைவர் கே.செல்வம், கரிசல் பட்டி ஜோசப் ஆசான், கசவனம் பட்டி கிளை செயலாளர் முருகவேல், ஊர் நாட்டாண்மை காளியப்பன், ஊர் முக்கிய பிரமுகர்கள் மல்லையகவுண்டர், சீதாராமன், பாலமுருகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் முருகானந்தம், ஒன்றிய ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் தங்கபாண்டி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ராமமூர்த்தி தலைமையில், தெற்கு மாவட்ட கழக அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் 28.05.20025 புதன்கிழமை அன்று நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, ஜூன் 3 முத்தமிழ் அறிஞர்,தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் என்றும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை கழக நிர்வாகிகளுக்கு வழங்கி சிறப்புரையாற்றினார்.மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் இரா.புவனேஸ்வரி பெருமாள் மற்றும் மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் என 300க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. அரங்கநாதன்

**மே 30 (2004)**



**திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலம் தொட்டு கழகப் பணியாற்றியவர்.**

**திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**விலைவாசிப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**